भारत सरकार
India Post

# டாக் சம்வாத்

ஜனவரி, 2026



भारतीय डाक
डाक सेवा-जन सेवा

India Post
Dak Sewa-Jan Sewa

# பயணம்


1 மாண்புமிகு அமைச்சரின் செய்தி

2 குரல்களுக்கான ஒரு மேடை, முன்னேற்றத்திற்கான ஒரு பாதை: ஜி டி எஸ் சம்மேளனம், கோல்ஹாப்பூர்

3 திறமையையும், சாதனையையும் கௌரவித்தல்

4 சமூக இணைப்பை வலிமைப்படுத்துதல்: ஹார்ன்பில் திருவிழா, 2025

5 அஞ்சல் வட்டங்களின் செயற்பாட்டுத்திறன் மீளாய்வு:

6 உலகளாவிய அஞ்சல் ஒத்துழைப்பை வலிமைப்படுத்துதல்: பெர்னிலும், ஜெனீவாவிலும் இந்திய அஞ்சல் துறை

7
- தலைமைத்துவம், தொலைநோக்குப் பார்வை, தாக்கத்தைக் கொண்டாடுதல்:
- சிறந்த ஆளுகைப் பணிமனையில் சிறப்புப் பரப்புரை இயக்கம் 5.0 ஐக் காட்சிப்படுத்துதல்:

8
- தமிழ்நாட்டில் அஞ்சல் நடவடிக்கைகளின் மீளாய்வு
- இந்திய அஞ்சல் துறை, அஞ்சல் வர்த்தக அரங்கு - 2025 இல் DIGIPIN க்காக APPU புத்துருவாக்க விருதினை வென்றது:

9 இந்திய அஞ்சல் துறையும், ரஷ்ய அஞ்சல் துறையும் பார்சல் சேவைகளை விரிவு படுத்துதல்:

10
- இந்திய அஞ்சல் துறை, பிஎஸ்இ-இடம் பங்குதாரராகியுள்ளது
- ஏ. டி. கேயார்னேவுடன் ஒரு முழுமையான உருமாற்றப்பயணத்தில் இந்திய அஞ்சல் துறை தன்னை ஒரு புதுத்துறையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது

11 அடுத்த தலைமுறை (N - GEN ) அஞ்சலகங்கள் மரபையும், நவீனத்துவத்தையும் முன்னெடுத்துச் செல்கின்றன

14 அஞ்சல் நாயகர்கள்

15 சிறப்பு அம்சங்கள்

16 அஞ்சல்தலைகள் சேமிப்பு மூலை: அஞ்சல்தலைகளும், கதைகளும்

22 முக்கிய அம்சங்கள்

संचार मंत्रालय
MINISTRY OF
COMMUNICATIONS



# தொலைத்தொடர்புகள் துறை அமைச்சரின் செய்தி

வணக்கம்.
நாம் ஒரு புதிய ஆண்டின் தொடக்கத்தில் நின்று கொண்டிருக்கும் காரணத்தினாலும், மென்மையான முறையில் 2025 -ஆம் ஆண்டின் அத்தியாயத்தை முடிக்க வேண்டியவர்களாக இருப்பதாலும் நான் ஓர் ஆழமான நன்றியுணர்வுடனும், நிச்சயமான பெருமிதத்துடனும் உங்களுக்கு எழுதிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆண்டு என்பது நாம் சென்றடைந்த மைல் கற்களைப் பற்றியது மட்டுமன்று; மாறாக, நமது மனநிலையுறுதிப்பாட் டில் ஒரு மாற்றம், இந்திய அஞ்சல் துறை கேட்டறிந்து கொண்ட, கற்றுக் கொண்ட, எதிர்காலத்தின் மீது துணிவாகச் சார்ந்திருக்கும் ஓர் ஆண்டு இது. இந்த அம்சங்களில் எந்த ஒன்றும் நம்முடைய அஞ்சல் துறைக் குடும்பத்தின் அர்ப்பணிப்புணர்வு, வாழ்க்கைத் தொழில் சார்ந்த பண்புத்தொகுதி, சிறிதும் நிலை தடுமாறாத கடப்பாட்டுறுதி -இவையில்லாமல் சாத்தியமே ஆகியிருக்காது. அவர்களே பொதுச்சேவை உணர்வை அதனுடைய ஆகச்சிறந்த நுண்திறன் எல்லைக்கு உயர்த்திப் பிடித்திருப்பவர்கள்.

தொலைநோக்குப் பார்வையுடைய நமது மாண்புமிகு பிரதமர் திரு . நரேந்திர மோடி அவர்களின் வழி காட்டப்படும் இந்திய அஞ்சல் துறை, தன்னுடைய உருமாற்றப் பயணத்தை ஒரு நவீன, தொழில்நுட்பரீதியாகத் திறன் படைத்த ஒரு நிறுவனமாகத் தொடர்ந்து மேற்கொண்டிருக்கிறது. அதே சமயம், அஞ்சல் சேவை, மக்கள் சேவையின் காலங்கள் கடந்து நிலைத்திருக்கும் சிறப்புப் பண்புகளில் அது உறுதியாக நங்கூரமிட்டு நிற்கிறது. நமது பயணத்திற்கு மையப்பகுதியாகத் தொடர்ந்து கடைசி மைல் வரை சென்று வழங்குதல், குடிமக்களை மையமிட்டுள்ள சேவைகளை விரிவுபடுத்துதல், எண்ணியல் மற்றும் நிதியியல் உள்ளாக்கம் ஆகியவற்றை விரிவாக்கம் செய்தல் என்பதே நிலைத்து நீடித்திருக்கிறது. அந்தப்பகுதி, ஒவ்வோர் இந்தியருக்கும் செயற்திறன், நம்பிக்கை, கவுரவம் ஆகியவற்றுடன் சேவையாற்றுவதை உறுதி செய்வதாக இருக்கும்.

இளம் இந்தியாவுடனான நமது அதிகரித்து வளர்ந்து வரும் இடையாடல்கள் நெக்ஸ்ட்ஜென் அஞ்சலகங்களைத் தொடங்கி வைத்திருப்பதன் மூலம் இந்த ஆண்டின் தீர்மானகரமான முக்கிய அம்சமாக அமைந்துள்ளது. நமது பாரம்பர்யத்திலிருந்து விலகிப்போதலாக இது கருக்கொண்டிருக்கவில்லை; மாறாக, அதனுடைய இயற்கையான பரிணாம வளர்ச்சியாகவே ஆகியுள்ள இத்தகைய வெளிகள், அடுத்த தலைமுறைகளுடன் ஒரு புதுப்பிக்கப்பட்ட உரையாடலையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. டெல்லி ஐ ஐ டி வளாகம் முதல், ஜம்முவில் எய்ம்ஸ் மற்றும் தமிழ்நாட்டில் கொங்கு பொறியியல் கல்லூரி வரை, மற்றும் நாடு நெடுகிலும் வேறு பல இடங்களில் அமைந்துள்ள இத்தகைய மையங்கள், இந்திய அஞ்சல் துறை அலுவலகங்களைக் கூட்டிணைந்த செயல் பாடு, இணைப்பு, அறிதலார்வம் ஆகியவற்றுக்கான வெளிகளாக மீள் அறிமுகம் செய்திருக்கின்றன.
நாடு தழுவிய வகையில் 46 அடுத்த தலைமுறை அஞ்சலகங்கள் முழு வடிவம் பெற்று இயங்கத் தொடங்கியிருக்கும் நிலையில், இந்த முன்னெடுப்பு, இளைய சமுதாயத்தினரைச் சென்று சேர்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சிந்தனைகள் நிரம்பிய, விருப்பத்துடன் தாமாக எடுக்கப்பட்ட ஒன்றாக அமைகிறது. இந்த முயற்சியைத் தனிச்சிறப்புடையதாக ஆக்கியுள்ள அம்சம் எதுவெனில், மாணவர்களின் தம்மிச்சையான, செயலூக்கமிக்க பங்கேற்பேயாகும். இந்த அஞ்சலகங்கள் அனைத்தும் அவர்களுடைய சிந்தனைகள், ஆற்றல், உடைமையுணர்வு ஆகியவற்றுடன் கற்பனை செய்யப்பட்டு, உயிர்ப்பு மிக்கவையாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒவ்வோர் அர்த்தத்திலும், அவை மாணவர்களைக் கொண்டே கருக்கொள்ளப்பட்டு, மாணவர்களாலேயே வடிவமைக்கப்பட்டவை; எவ்விதத் சந்தேகமின்றி அவர்களுக்கே சொந்தமானவை. இந்தப் பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்குப்பார்வையை வடிவமைத்த திலும், அதற்கென முதலடிகளை எடுத்து வைத்திருப்பதிலும் இளம் மனங்களை உற்சாகமூட்டியுள்ள கல்வி நிலையங்களுக்கும், அஞ்சல் பணிக்குழுக்களுக்கும் என் மனம் நிறைந்த பாராட்டுகளை நான் இந்த ஆவணத்தில் பதிவு செய்திருக்கிறேன்.

இந்த இளைஞர் மையப்படுத்தப்பட்ட முன்னெடுப்புகளுக்கும் மேலாக, சேவைகள் வழங்கலிலும், தொழில்நுட்பத்தால் உந்தித்தள்ளப்படும் சீர்திருத் தங்களிலும் கூட முக்கியத்துவம் வாய்ந்த நீண்ட காலடிப்பதிவுகளை 2025 -ஆம் ஆண்டு பதிவு செய்திருக்கிறது. அஞ்சல் நடவடிக்கைகளில் நெடுகிலும் செயற்பாட்டுத் திறனை அதிகரிப்பதை IT 2.0 வின் தொடக்கம் சாதித்துள்ளது. அதே சமயம், DIGPIN போன்ற முன்னெடுப்புகள், நாடு முழுவதும் துல்லியமான, தரப்படுத்தப்பட்ட எண்ணியல் முகவரியாக்கம் ஆகியவற்றுக்கான அடித்தளத் தைத் தந்துள்ளன. விரிவாக்கப்பட்டுள்ள கடவுச்சீட்டு சேவைகள், ஆதார் பெயர்ப் பதிவுகள், வீட்டு வாயில்களில் குடிமக்களுக்கான சேவைகள் ஆகியவற்றின் மூலம் ஆளுகை வழங்கலில் இந்திய அஞ்சல்துறை ஒரு முக்கியத்துவமிக்க பாத்திரத்தை வகித்துள்ளது. இவை, குடிமக்களின் இல்லங்களுக்கு மிக நெருக்கமான விதத்தில் அத்தியாவசியமான சேவைக ளைக் கொண்டு சேர்த்துள்ளன.

संचार मंत्रालय
MINISTRY OF
COMMUNICATIONS



# தொலைத்தொடர்புகள் துறை அமைச்சரின் செய்தி

உலகளாவிய மேடைகளிலும் கூட இந்திய அஞ்சல் துறையின் தலைமைத்துவம் உணரப்பட்டுள்ளது. இந்தியாவின் எண்ணியல் பொதுவெளி உள்கட்டமைப்பு வசதிகளை உலகுக்குக் காட்சிப்படுத்தியுள்ள அதே சமயத்தில், உலகளாவிய அஞ்சல் சேவைகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் நமது வளர்ச்சியடைந்து வரும் பாத்திர வகிப்பை UPI - UPU மேடையை வெற்றிகரமாக ஒன்றிணைத்த தும், ஆசிய - பசிபிக் அஞ்சல் தலைவர்களின் அமைப்பை ஏற்பாதரவு அளித்து நடத்தித்தந்ததும் அழுத்தமாக அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளன.

இந்த உருமாற்றத்தின் இதயத்தில் நமது மக்கள் உறைந்திருக்கின்றனர். பயிற்சியளிப்பதிலும், செயற்திறன் கட்டமைப்பிலும் கவனங்குவித்த முயற்சிகள், புதிய எண்ணியல் திறன்கள், சேவைச் செயற்தகுதிகள் உடையவர்களாக நமது பணியாளர்களையும், கிராமின் டாக் சேவகர்களையும் ஆக்கியுள்ளன. தளத்தில் அர்த்தமுள்ள விளைவுகளை வெளிக்கொணர்வதில் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை அவை உறுதிப்படுத்தியுள்ளன. நமது முன்னெடுப்புகளுக்குப் பொதுமக்கள் தந்து வரும் உத்வேகமிக்க எதிர்வினைகள், நமது பாரம்பரியம் மங்கி மறைந்து விடவில்லை என நமக்கு மீள் உறுதியளித்துள்ளன. மாறாக, திரைகளுக்குப் பின்னால் இருந்தவாறே சிறிதும் சோர்வின்றிப் பணியாற்றிக் கொண்டிருக்கும் கடப்பாட்டுறுதி மிக்க பணிக்குழுக்களால் அந்தப் பாரம்பர்யம் புதுப்பிக்கப் பட்டு, முன்னெடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருப்பதையும் அவை அளிக்கும் மீள் உறுதியளிப்பு காட்டுகிறது.

புத்தாண்டை நம் வரவேற்கும் நிலையில், நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் இந்திய அஞ்சல் துறையை நம்பிக்கைக்கு உத்வேகம் அளிப்பதாக, அணுகல் வசதிகளை விரிவாக்கம் செய்வதாக, எதிர்காலத் தலைமுறைகளின் விருப்பார்வங்களுடன் எதிரொலி செய்வதாக வடிவமைத்துக் கொண்டு போவோம் என்பதில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

வரவிருக்கும் ஆண்டுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களுடன்,

ஜோதிராதித்திய எம். சிந்தியா,
மாண்புமிகு தகவல் தொடர்புகள் துறை அமைச்சர்,
இந்திய அரசாங்கம்

# குரல்களுக்கான ஒரு மேடை, முன்னேற்றத்திற்கான ஒரு பாதை: ஜி டி எஸ் (GDS ) சம்மேளனம், கோல்ஹாப்பூர்:



மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் மற்றும் வடகிழக்குப் பகுதிகளின் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய எம். சிந்தியா அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஜி.டி.எஸ். சம்மேளனத்தில் பங்கேற்பதற்காக, கோவா மற்றும் புனே மண்டலத்தில் இருந்து 6,000-க்கும் மேற்பட்ட கிராமின் தாக் சேவகர்கள் (GDS) மகாராஷ்டிர மாநிலம் கோல்ஹாப்பூரில் ஒன்றுகூடினர். இந்திய அஞ்சல் துறையின் ஊரக வலைப்பின்னல் அமைப்பின் முதுகெலும்பாக விளங்கும் கிராமின் தாக் சேவகர்களின் சேவையும், அர்ப்பணிப்புணர்வும் இந்த சம்மேளனத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டது.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

தொலைதூர மற்றும் மூலைமுடுக்குகளில் வாழும் சமூகங்களை ஒன்றிணைப்பதில் கிராமின் தாக் சேவகர்கள் வகிக்கும் முக்கியப் பங்கு இந்த நிகழ்வில் வெளிப்படுத்தப்பட்டது.

கடைசி மைல் வரை அஞ்சல், வங்கி, காப்பீடு மற்றும் அரசாங்கச் சேவைகளை வழங்குவதில் அவர்கள் ஆற்றிவரும் பணிகளும் எடுத்துக்காட்டப்பட்டன. நிதியியல் உள்ளாக்கத்தை வலுப்படுத்துதல், நேரடிப் பயனாளர் பணப்பரிவர்த்தனைகளை (Direct Benefit Transfers) செயல்படுத்துதல், மற்றும் ஊரக இந்தியா முழுவதும் குடிமக்கள் மைய சேவைகள் சென்று சேர்வதை விரிவுபடுத்துதல் ஆகிய துறைகளில் அவர்களின் முயற்சிகள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் பயனாளிகளுக்கு நேரடிப் பண வழங்கல்கள், அஞ்சல் ஆயுள் காப்பீடு (PLI) மற்றும் ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடு (RPLI) பாலிசிகள் பெறுதல், புதிய அஞ்சல் சேமிப்பு கணக்குகள் தொடங்குதல், கடிதங்கள் மற்றும் பார்சல்கள் விநியோகம் போன்ற முக்கியத் துறைகளில் சிறப்பான செயல்திறனை வெளிப்படுத்திய கிராமின் தாக் சேவகர்களுக்கு, சம்மேளனத்தின் போது உச்ச செயல்பாட்டிற்கான பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

ஊரக இந்தியாவில் பொதுச் சேவைகள் வழங்கலுக்கான நுழைவாயிலாக இந்திய அஞ்சல் துறையை வலுப்படுத்தி மாற்றியமைப்பதற்கான அரசாங்கத்தின் கடப்பாட்டுறுதியை இந்த சம்மேளனம் மீண்டும் உறுதிப்படுத்தியது. அதோடு, அஞ்சல் அலுவலங்களை குடிமக்கள் மைய சேவை மையங்களாகவும், ஊரக பொருளாதார வளர்ச்சியின் இயக்கிகளாகவும் மாற்றுவதற்கான அரசாங்கத்தின் உறுதியையும் இது மீளஉறுதிப்படுத்தியது.

# திறமையையும், சாதனையையும் கௌரவித்தல்:



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

ஐ.பி.பி.எஃப் - Batam 2025 போட்டிகளில் பாடி பில்டிங் சாதனைக்காக வெண்கலப் பதக்கத்தை வென்ற, மும்பைச் சேர்ந்த அஞ்சல் ஊழியர் திரு. அசுதோஷ் சாஹா அவர்களை, மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் வடகிழக்குப் பகுதிகளின் மேம்பாட்டு வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய எம். சிந்தியா சமீபத்தில் சந்தித்து பாராட்டினார்.

திரு. சாஹாவின் அர்ப்பணிப்புணர்வு, கட்டுப்பாடு, தொழில் முறை கடமை ஆகியவற்றைத் தாண்டி, நிபுணத்துவத்திறனை அடைவதற்கான ஆர்வத்தையும் அங்கீகரித்து, வாழ்த்துகளைத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர், அவரை இந்தியாவின் "நவரத்னா" என்று சிறப்பித்து கூறினார்.

ஆண்டுக்கணக்கில் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள், இடையூறுகளைத் தாங்கிக்கொண்டு மேற்கொண்ட பயிற்சி, நிலைத்திருக்கும் உறுதியான மனநிலையுடனான முயற்சி, குடும்பத்தின் மற்றும் அஞ்சல் துறையின் தொடர்ச்சியான ஆதரவு ஆகியவை திரு. அசுதோஷ் சாஹாவின் வெற்றிக்குக் காரணமாகும்.

இந்த சாதனை, நாடு முழுவதும் உள்ள அஞ்சல் துறை பணியாளர்களுக்கு ஓர் உத்வேகமாகவும், இந்திய அஞ்சல் துறைக்கு ஒரு பெருமித தருணமாகவும் அமைந்துள்ளது.

# சமூக இணைப்பை வலிமைப்படுத்துதல்: ஹார்ன்பில் திருவிழா - 2025







புகழ்பெற்ற ஹார்ன்பில் திருவிழா - 2025 நடைபெற்று கொண்டிருந்த போது, மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித்துறை மற்றும் தகவல் தொடர்பு துறையின் அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி நாகாலாந்திற்கு பயணம் மேற்கொண்டார். அந்த மாநிலத்தின் செழுமையான கலாச்சாரப்பாரம்பரியத்தையும், ஒற்றுமையையும் கொண்டாடும் திருவிழா இது.

இந்தத் திருவிழாவை "நாகாலாந்தின் இதயத்துடிப்பு" என்று விவரித்த மாண்புமிகு அமைச்சர், அதன் உயிராற்றல் மிக்க மரபுகளையும், ஒருமித்த உணர்வையும் பாராட்டி பேசினார்.
பயணத்தின் போது, டாக்டர் பெம்மசானி நாகாலாந்தின் அஞ்சல் சேவைகள் இயக்குநரை சந்தித்து பேசியார். மேலும் கிஸ்மாவில், வடகிழக்கு வட்டத்தில் அமைந்த நாகாலாந்து அஞ்சல் மண்டல அரங்கையும் பார்வையிட்டார். அந்த அரங்கு,

இந்திய அஞ்சல் துறையின் பரந்து விரிந்த சேவைகளையும், வடகிழக்கு மண்டலத்தின் தொலைதூர மூலைமுடுக்குகளில் வாழும் சமூகங்களுக்கு சேவை வழங்கும் அதன் கடப்பாட்டுறுதியையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

அவருடைய பயணத்தின் ஒரு பகுதியாக, மாண்புமிகு அமைச்சர் கோஹிமாவில் மாநில அளவிலான நீர்த்தடுப்பு மகோத்ஸவ் - 2025 ஐ தொடங்கி வைத்தார். இது நிலையான ஊரக மேம்பாட்டு வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் கவனத்தையும் உறுதிப்படுத்தும் விதமாக இந்த மகோத்ஸவ் அமைக்கப்பட்டுள்ளது.

# அஞ்சல் வட்டங்களின் செயற்திறன் வெளிப்பாடுகள் - மீளாய்வு:




நாடு முழுவதும் அஞ்சல் நிலையங்களின் நவீனமயமாக்கத்தை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மாதாந்திர மீளாய்வு செயற் நிகழ்ச்சி ஒன்றின் பகுதியாக, 24 அஞ்சல் வட்டங்களுடனும் செயறக்திறன் வெளிப்பாட்டு மீளாய்வுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, மாண்புமிகு தகவல் தொடர்புகள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில், செயல்பாடு திறனை மேம்படுத்துதல், நிதியியல் உள்ளாக்கத்தை விரிவுபடுத்துதல், பார்சல் சேவைகள் மற்றும் புறச்சூழல் சாதனங்களை வலுப்படுத்துதல் தொழில்நுட்பம் சார்ந்த சீர்திருத்தங்களை முன்னெடுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி முழுமையான விவாதங்கள் நடைபெற்றன. மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் விக்ஷித் பாரத் நோக்கத்துடன் ஒத்திசைந்து, தொழில்நுட்ப உதவியுடன் மேற்கொள்ளக்கூடிய சீர்திருத்தங்களை மேலும் முன்னெடுக்க வேண்டும் என்பதும் விவாதிக்கப்பட்டது.

விநியோக சேவைகளை வலுப்படுத்துவதற்கும், சேமிப்பு மற்றும் காப்பீட்டு சேவைகளின் கீழ் கூடுதல் விரிவாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும், நமது மூலவளங்களை முழுமையாக பயன்படுத்துமாறு அமைச்சர் அழைப்பு விடுத்தார். இந்திய அஞ்சல் துறையின் ஈடு இணையற்ற நாடு தழுவிய வலைப்பின்னல் அமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அதன் மூலம் நாட்டின் வளர்ந்து வரும் தளவாடங்கள் புறச்சூழல் சாதனங்கள் மற்றும் நிதியியல் தேவைகளுக்கு ஆதரவளிக்க இயலும் என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

கடிதங்கள், பார்சல்கள், சேமிப்புகள், காப்பீடுகள் போன்ற அனைத்து முதன்மை பொருள்களின் வழங்கலைவும், நிதியியல் முன் செயல்பாட்டை உறுதிப்படுத்தவும், பொதுநலத்தை உயர்த்தும் விதமாக சமச்சீரான அணுகுமுறையுடன் செயற்க்திறனை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் அவர் அடிக்கோடிட்டுக் குறிப்பிட்டார்.

# உலகளாவிய அஞ்சல் ஒத்துழைப்பை வலிமைப்படுத்துதல்: பெர்ன் மற்றும் ஜெனீவாவில் இந்திய அஞ்சல் துறை:



அஞ்சல் துறையின் செயலாளர் திருமதி வந்திதா கவுல் அவர்கள், பெர்ன் நகரில் நடைபெற்ற CA/POC வட்டம் அமைப்பின் ஸீரோ அமர்வில், பல்வேறு பகுதிகளின் அஞ்சல் துறைகளின் தலைவர்களுடன் இணைந்து உலகளாவிய அஞ்சல் ஒத்துழைப்பை வலிமைப்படுத்த பங்கேற்றார்.

இந்த பயணத்தின் போது, PUASP, PAPU, CPU ஆகிய அமைப்புகளின் பொதுச்செயலாளர்களுடனும், நைஜீரியாவின் அஞ்சல் துறை தலைமை அதிகாரிகளுடனும் பயனுள்ள விவாதங்களில் கலந்துகொண்டார். நவீன தொழில் நுட்பங்களைச் சுவீகரித்தல், செயற்க்திறன்களை மேம்படுத்துதல், அஞ்சல் துறைகளின் நிர்வாகங்களுக்கிடையே அதிகரித்த ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் மீது மேற்கொண்ட விவாதங்கள் கவனத்தை ஈர்த்தன.

அதைத்தொடர்ந்து, ஜெனீவாவில் திருமதி கவுல் இந்தியாவின் நிரந்தரத் தூதுவரக மையத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், ஆசியா-பசிபிக் அஞ்சல் தொழிற்சங்க அமைப்பின் பொதுச்செயலாளர் பதவிக்கு இரண்டாவது முறையாக போட்டியிடும் வேட்பாளரான டாக்டர் வினயா பி. சிங் தமது ஆதரவைத் தூதுவரகத்தின் சார்பில் தெரிவித்தார்.

இந்திய அஞ்சல் துறை, வலிமையான சர்வதேச பங்குதாரத்துவ உறவுகளை பாதுகாத்து வளர்த்தெடுக்கவும், மேலதிகமாக ஒருங்கிணைந்த உலகளாவிய அஞ்சல் சூழலமைப்பில் பங்களிப்புச் செய்யவும் தனது கடப்பாட்டுறுதியை தொடர்ந்தும் தக்கவைத்திருக்கிறது.

## தலைமைத்துவம், தொலைநோக்குப்பார்வை, தாக்கத்தைக் கொண்டாடுதல்:



அஞ்சல், நிதியியல் மற்றும் மாற்றுத்திறன் சேவைப் பிரிவுகளில் நிலவுகின்ற நீடித்த உருமாற்றத்திற்கான சீர்திருத்தங்களை ஊக்குவிக்கும் பணிக்காக, திருமதி வந்திதா கவுல், செயலாளர் அஞ்சல் துறை, பிசினஸ் டுடே மோஸ்ட் பவர்ஃபுல் விமன் விருதுகள் – 2025 நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.மேலும், தொழில் நுட்பத்திறன்களால் உண்டாக்கப்படும் மாற்றத்தை முன்னெடுக்க தலைமை வகித்ததற்காகவும் இந்த கௌரவம் வழங்கப்பட்டது.

வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இதயத்தைத் தொடும் ஒரு நல்லெண்ணச் சின்னமாக, அவர் இந்தக் கௌரவத்தை அஞ்சல் துறையின் பணியாளர்களுக்கு, துறையின் முன்னேற்றத்திற்கு உண்மையான உந்துவிசையாக செயல்படும் அனைவருக்கும் சமர்ப்பித்தார்.

## சிறந்த ஆளுகைப் பணிமனையில் சிறப்புப் பரப்புரை இயக்கம் 5.0 காட்சிப்படுத்தப்பட்டது :



நல்ல ஆளுகை நடைமுறைகள் தொடர்பான தேசிய அளவிலான பணிமனையில், அஞ்சல் துறையின் செயலாளர் திருமதி வந்திதா கவுல் அவர்கள் இயக்கம் 5.0 பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார். அவரது சமர்ப்பணத்தின் போது, பரப்புரையில் நடைமுறைப்படுத்தல் சட்டகத்தை தெளிவாக எடுத்துக்காட்டினார். அதன் முக்கிய திறவுகோல் அம்சங்கள், நிர்வாக ரீதியான செயற்க்திறன்களை மேம்படுத்துவதில் அளிக்கும் முக்கியத்துவம், அலுவலகங்களில் நீடித்த தூய்மைப் பண்புகளை முன்னெடுத்துச் செல்லுதல், நல்ல ஆளுகைக்கு துறையின் கடப்பாட்டுறுதியை வலுவாக மீண்டும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை அவர் வெளிப்படுத்திக் காட்டினார்.

# தமிழ்நாட்டில் அஞ்சல்துறை நடவடிக்கைகளைப் பற்றிய மீளாய்வு:




அஞ்சல் துறையின் செயலாளர் திருமதி வந்திதா கவுல் அவர்கள், தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் செயற்திறன் வெளிப்பாடு மற்றும் தற்போதைய நிலைத்தகவல்களை மீளாய்வு செய்தார். மாநிலம் முழுவதும் அஞ்சல் சேவைகளை வலிமைப்படுத்துவதை இலக்காகக் கொண்ட எதிர்கால முன்னெடுப்புகள் மற்றும் முதன்மை திறவுகோல் நடவடிக்கை முன்னுரிமைகள் பற்றிய ஆழமான விவாதங்களும் இந்த பயணத்தின் போது நடைபெற்றது. தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் முதன்மை அஞ்சல் துறை தலைவர் திருமதி மரியம்மா தாமஸ், அனைத்து அஞ்சல் துறை தலைமை அதிகாரிகள், DPS(HQ), துணைப் அஞ்சல் துறை தலைமை அதிகாரிகள் மற்றும் அஞ்சல் வட்டத்தின் முதுநிலை அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த மீளாய்வு கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடலின் போது, செயலாளர் சேவைகள் செயற்திறன் வெளிப்பாடு, வாடிக்கையாளர் அனுபவம், புத்துருவாக்க முன்னுரிமைகள், நிர்வாக ரீதியான மூல உத்திகள், செயற்திறன் வெளிப்பாட்டில் துறையின் கவனத்தை அதிகரித்தல், சேவைத்திறன்களின் நிபுணத்துவம் மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் போன்ற அனைத்து அம்சங்களையும் தலைமைக் குழுவுடன் இணைந்து விவாதித்தார்.

# அஞ்சல் வணிக வட்ட அரங்கு - 2025 இல் இந்திய அஞ்சல் துறை, DIGIPIN ற்காக APPU புத்துருவாக்க விருதை வென்றது:




ஆசிய பசிபிக் போஸ்டல் யூனியன் (APPU) நடத்திய அஞ்சல் வணிக வட்ட அரங்கு - 2025 இல், DIGIPIN க்காக வழங்கப்பட்ட கவுரவமிக்க புத்துருவாக்க விருதினை பெற்றதற்காக இந்திய அஞ்சல் துறை கவுரவிக்கப்பட்டுள்ளது.இந்த அங்கீகாரம், இந்திய அஞ்சல் துறையின் வலிமையான தொழில்நுட்பச் செயற்க்திறன்களையும், அஞ்சல் பிரிவுக்காக புத்துருவாக்கத்தை ஊக்குவிப்பதில் துறையின் கடப்பாட்டுறுதியையும் உறுதிப்படுத்திக் காட்டுகிறது.

மிகத் துல்லியமான ஒரு எண்ணியல் இனங்காணும் அமைப்பை வழங்கியதன் மூலம், முகவரியிடுதலில் நுண்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பு ஒரு சாதனை மைல் கல்லாக கருதப்படுகிறது. DIGIPIN மூலம், விரைவான, நம்பகமான, செயற்க்திறன் மிக்க இறுதி மைல் சேவை விநியோகத்தை சாத்தியமாகியுள்ளது. பல புவியியல் பகுதிகளில் நீண்டதூரமாக வாழும் குடிமக்களுக்கு அணுகல் வாய்ப்பையும், நிதியியல் உள்ளாக்கத்தன்மையையும் உறுதிப்படுத்துவதுடன், நடைமுறைப்படுத்துதலில் செயற்க்திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் இந்திய அஞ்சல் துறையின் தொடர்முயற்சிகளையும் இந்த விருது பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

# இந்திய அஞ்சல் துறையும் ரஷ்ய அஞ்சல் துறையும் பார்சல் சேவைகளை விரிவாக்கியுள்ளன:




காம்பெடிட்டிவ் டிராக்டு பாக்கெட் சேவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம், எல்லைகளை கடந்த அஞ்சலியல் ஒத்துழைப்பை அதிகரிக்கக் கூறும் ஒரு குறிப்பிடத்தக்க அடி வைப்பை இந்திய அஞ்சல் துறையும் ரஷ்ய அஞ்சல் துறையும் எடுத்துள்ளன.இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான பார்சல்கள் விநியோகத்தை விரைவான காலக்கோடுகள், முன்னேற்றமடைந்த முனை-டு-முனை பின்தொடர்தல், அதிகரிக்கப்பட்ட தரவு பரிவர்த்தனை, மற்றும் எல்லைகள் கடந்த பார்சல் நகர்வியல் நடைமுறையில் மாபெரும் நம்பகத்தன்மை ஆகியவற்றை சாத்தியமாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இந்த இருதரப்புச் ஒப்பந்தம், அஞ்சல் துறையின் அஞ்சல் சேவைகள் பொது இயக்குநர் திரு. ஜிதேந்திர குப்தா மற்றும் ரஷ்ய அஞ்சல் துறையின் பொது இயக்குநர் திரு. மைகாய் யூரிவிச் வோல்கோவ் ஆகியோராலும் கையெழுத்திடப்பட்டது.எல்லைகள் கடந்த பரிவர்த்தனைகளில் ஈடுபட்டிருக்கும் மின்-வர்த்தக விற்பனையாளர்கள், குடும்பங்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், ஸ்டார்ட்-அப்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் MSME நிறுவனங்கள் ஆகியோருக்கு, இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தம் மிகுந்த ஆதாயம் தரும் செயற்க்திறன் மிக்க சர்வதேச அஞ்சல் சேவைகள் வழங்குவதற்கான வாய்ப்பாக அமைந்துள்ளது.

## பம்பாய் பங்குச்சந்தையுடன் ( BSE ) இந்திய அஞ்சல் துறை பங்குதாரனது:



உள்ளாக்க வளர்ச்சியையும், நிதியியல் உற்பத்திப் பொருட்களுக்கான விரிவான அணுகல் வழிகளையும் நோக்கி மேற்கொள்ளப்படும் ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கையாக, அஞ்சல் துறை ஆசியாவின் மிகப் பழமையான பங்குச் சந்தையான பம்பாய் பங்குச் சந்தையுடன் (BSE), ஒரு மைல்கல்லாகத் திகழும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு பங்குதாரராகியுள்ளது.2025-26 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டின் தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்திசைந்து, இந்தப் பங்குதார ஒப்பந்தம், இந்திய அஞ்சல் துறையின் விரிவும் நீட்சியும் கொண்ட அஞ்சல் வலைப்பின்னல் அமைப்பை பயன்படுத்தி, முதலீட்டுச் சேவைகள் — குறிப்பாக ஊரக மற்றும் புறநகர் பகுதிகளுக்கு — சென்று சேரும் வகையில் ஆழமாக நிலைபெறச் செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட அஞ்சல் துறை பணியாளர்கள் பயிற்சி வழங்கப்பட்ட பின்னர், ம்யூச்சுவல் ஃபண்ட் விநியோகிப்பாளர்களாகச் சான்றளிக்கப்படுவர். இவ்வாறு சான்றிதழ் பெற்றவர்கள், முதலீட்டாளர் சேவைகள் வழங்கும் அதிகாரம் பெறுவார்கள். BSE StAR MF மேடையின் மூலம், அவர்கள் முதலீட்டாளர்களுக்கு தேவையான சேவைகளை வழங்க முடியும். இந்த முன்னெடுப்பு, நிதியியல் விழிப்புணர்வை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், குடிமக்களுக்கு முதலீட்டில் பங்கேற்கும் வாய்ப்பையும் விரிவுபடுத்துகிறது. அவர்கள் வசிக்கும் வீடுகளுக்கு அருகிலேயே உள்ள, நம்பகத்தன்மை கொண்ட முதலீட்டு சேவை மையங்களுக்கு அணுகும் அதிகாரத்தைப் பெற்றவர்களாக மாறும் வாய்ப்பை இந்த முயற்சி வழங்குகிறது.

## ஏ. டி. கேயார்னேவுடன் ஒரு முழுமையான உருமாற்றப்பயணத்தில் இந்திய அஞ்சல் துறை தன்னை ஒரு புதுத்துறையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது

ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 90 சதவீத அஞ்சல் நிலையங்களை உள்ளடக்கி, நாடு தழுவிய வலுவான வலைப்பின்னலுடன் 1.65 இலட்சம் அஞ்சல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய அஞ்சல் துறை. இந்திய அரசாங்கத்தின் உள்ளாக்கத்தன்மையுள்ள வளர்ச்சி, எண்ணியல் அதிகாரமூட்டல் மற்றும் குடிமக்களுக்கு எளிதான வாழ்வு என்ற தொலைநோக்குப் பார்வையின் அடித்தளமாக விளங்குகிறது.நாடு முழுவதும் எளிதில் அணுகக்கூடிய, தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளை வழங்கும் நம்பகமான பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்தும் தேசிய முன்னுரிமைகளுடன், இந்திய அஞ்சல் துறையின் இந்த முழுமையான உருமாற்றத் திட்டம் ஒத்திசைந்து செல்கிறது.

நீடித்த நிதியியல் நிலைத்தன்மை, சேவை வழங்கலின் வலுப்படுத்தல் மற்றும் துறை நடவடிக்கைகளின் நவீனமயமாக்கல் ஆகிய இலக்குகளுடன், இந்திய அஞ்சல் துறை தற்போது ஒரு முழுமையான மாற்றப் பயணத்தை முன்னெடுத்து வருகிறது. கடிதங்கள் மற்றும் பார்சல்கள் உள்ளிட்ட முதன்மை வணிகப் பிரிவுகள், அஞ்சல் நிலைய சேமிப்பு வங்கி (POSB), அஞ்சல் ஆயுள் காப்பீடு (PLI/RPLI), குடிமக்கள் மையச் சேவைகள் மற்றும் அஞ்சல் தலைகள் சேகரிப்பு போன்ற துறைகள் முழுவதும் ஒருங்கிணைந்த மூல உத்தி அடிப்படையிலான கால அட்டவணை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது. மனிதவளம், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற மையத் திறன்களை வலுப்படுத்துவதும் இந்த முயற்சியின் ஒரு பகுதியாகும்.இந்த மாற்றப் பயணத்திற்கு ஆதரவாக, உலகளாவிய மேலாண்மை ஆலோசனை நிறுவனமான A.T. Kearney-யை இந்திய அஞ்சல் துறை இணைத்துள்ளது. பெரும் அளவிலான மாற்றுத் திட்டங்களில் அனுபவம் கொண்ட இந்நிறுவனம், பழைய பொறியமைவுகளை மதிப்பீடு செய்து, புதிய ஒருங்கிணைந்த மூல உத்திகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்த உதவும்.திட்டம் முன்னேறும் நிலையில், தலைமையகம் முதல் கள நிலை வரை உள்ள அதிகாரிகளும் பணியாளர்களும் ஆலோசனைகள், தரவுசார்ந்த செயல்பாடுகள் மற்றும் முன்னோட்ட முயற்சிகள் மூலம் ஒருங்கிணைந்த அணுகுமுறையில் பங்கேற்பார்கள். எதிர்காலத்திற்குத் தயாரான இந்திய அஞ்சல் துறையை உருவாக்க இந்த கூட்டு முயற்சி அத்தியாவசியமானதாகும்.

செயலாளர் (அஞ்சல் துறை):

“தேசிய நிறுவனமாக இந்திய அஞ்சல் துறை, மக்களின் நம்பிக்கையையும் வலுவான அமைப்பையும் கொண்டுள்ளது. இந்த மாற்றுத் திட்டம், செயற்க்திறன்களை வலுப்படுத்தி, குடிமக்கள் மையச் சேவைகள் என்ற அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையை நிஜமாக்கும் முக்கிய அடியாகும்.”

பொது இயக்குநர், அஞ்சல் சேவைகள்:

“இந்த முயற்சியின் வெற்றி, தலைமையகம் முதல் கள நிலை வரை உள்ள அனைவரின் ஒருங்கிணைந்த செயல்பாட்டை சார்ந்துள்ளது. நவீனமயமாக்லுடன், இந்திய அஞ்சல் துறையின் மைய விழுமியங்களை பாதுகாப்பதும் எங்கள் இலக்காகும்.”

## புதிய தலைமுறை அஞ்சல் நிலையங்கள்( N - GEN POST Offices ) மரபையும், நவீனத்துவத்தையும் முன்னெடுத்துச் செல்கின்றன:

நவீனமயமாக்கல் விரைவுத்திட்டத்தின் ஒரு பகுதியாக, நாடு நெடுகிலும் உள்ள 34 அஞ்சல் நிலையங்கள் 2025 டிசம்பர் 31ஆம் தேதியிலான நிலவரப்படி புதிய தலைமுறை அஞ்சலகங்களாக புனரமைக்கப்பட்டுள்ளன. நவீன உள்கட்டமைப்புகள், இலவச Wi-Fi வசதி மற்றும் எண்ணியல் சேவைகள் மூலம் தரம் உயர்த்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை இவ் அஞ்சலகங்கள் வழங்குகின்றன.சமகால உள்ளலங்கார அமைப்புகளுடன் வடிவமைக்கப்பட்ட இவை, இளைய தலைமுறைக்கு நட்பான, கவர்ச்சிகரமான மற்றும் எளிதில் அணுகக்கூடிய அஞ்சலகச் சேவைகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளன. மேலும், உட்புற வடிவமைப்பில் மாணவர்கள் ஓவியங்கள் தீட்டி படைப்புருவாக்க ரீதியாக பங்கேற்றிருப்பது, அலுவலக வெளிகளில் உயிரோட்டமிக்க வண்ணங்களையும், இளம் இந்தியாவின் ஆற்றலையும் பிரதிபலிக்கிறது.




IIT பிலாய், சத்தீஸ்கர்




ஆச்சார்யா தொழில்நுட்ப நிறுவனம், பெங்களூரு



ஜி.பி. பண்ட் பொறியியல் கல்லூரி, பௌரி, உத்தரகாண்ட்



IIT காந்திநகர், குஜராத்



ஆந்திரப் பல்கலைக்கழகம், விசாகப்பட்டினம், ஆந்திரப் பிரதேசம்



சி.எம்.எஸ், கோட்டயம், கேரளா



பொறியியல் கல்லூரி, திருவனந்தபுரம், கேரளா



NIT வாராங்கல், தெலங்கானா



பாகல்பூர் பொறியியல் கல்லூரி, பீகார்

ஆந்திரப் பிரதேசத்தில், வெல்லூர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி (VIT) நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள புதிய தலைமுறை அஞ்சலகத்தை தகவல் தொடர்புகள் அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி அவர்கள் தொடங்கி வைத்தார். அதேபோல், அஞ்சல் சேவைகள் (உறுப்பினர்) திரு. நீரஜ் குமார் அவர்கள் திருவனந்தபுரம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் புதிய தலைமுறை அஞ்சலகத்தை தொடங்கி வைத்தார்.எண்ணியல் உருமாற்றம், சமூக ஈடுபாடு மற்றும் சேவை நிபுணத்துவம் ஆகியவற்றை நோக்கிய இந்திய அஞ்சல் துறையின் பயணத்தில், இந்த முன்னெடுப்புக்கு மற்றுமொரு முக்கியமான மைல்கல்லாக திகழ்கிறது.



கொல்கத்தா பல்கலைக்கழகம், மேற்கு வங்காளம்



IIT பவாய், மும்பை



AIIMS விஜய்பூர், ஜம்மு



IIM இந்தோர், மத்தியப் பிரதேசம்



பஞ்சாப் பல்கலைக்கழகம், பஞ்சாப்



NIT ஹமீர்பூர், ஹிமாச்சல் பிரதேசம்



VIT ஏ.பி பல்கலைக்கழகம்,
ஆந்திரப் பிரதேசம்



IIM லக்னோ, உத்தரப் பிரதேசம்



மோதிராம் பாபுராம் அரசு முதுநிலை
கல்லூரி, ஹால்த்வானி, உத்தராகண்ட்



மகாராஜா ஸ்ரீராம் சந்திர பஞ்சா தேஒ
பல்கலைக்கழகம், ஒடிசா



திப்ருகர் பல்கலைக்கழகம், அசாம்




IIT பாட்னா, பீகார்



கவுகாத்தி பல்கலைக்கழகம், அசாம்




IIM ராஞ்சி, ஜார்கண்ட்



குரு ஜம்பேஷ்வர் பல்கலைக்கழகம்,
ஹிசார், ஹரியானா



IIT ஜோத்பூர், ராஜஸ்தான்



மிசோரம் பல்கலைக்கழகம், மிசோரம்



NIT ஜாம்ஷெட்பூர், ஜார்கண்ட்



ராஜேந்திர பல்கலைக்கழகம்,
பாலாங்கீர், ஒடிசா



NIT அகர்தலா, திரிபுரா




பண்டிட் ரவிஷங்கர் ஷுக்லா
பல்கலைக்கழகம், ராய்ப்பூர், சத்தீஸ்கர்




கொங்கு பொறியியல் கல்லூரி, தமிழ்நாடு

## அஞ்சல் நாயகர்கள்:




வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

கேரளாவைச் சேர்ந்த Mail Packer மெரின் ஜி. பாபு, விடாமுயற்சி, உறுதியான குறிக்கோள் உணர்வு மற்றும் அபாரமான தன்னிலைப் பொறுமை ஆகிய பண்புகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். செவித் திறனும் பேச்சுத் திறனும் குறைபாடுகளுடன் வாழும் மாற்றுத்திறனாளியான அவர், தன்னுடைய உடல்நல வரம்புகளை மீறி, தமக்குக் கொடுக்கப்பட்ட கடமைகளை மிகுந்த செயற்திறனுடன் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்.



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

மனா பஸ்தி கிளை அஞ்சல் நிலைய அதிகாரியான திரு. அசோக் குமார் துபேய், 36 ஆண்டுகளுக்கும் மேலாக தனது கிராமத்தில் அர்ப்பணிப்புணர்வு மற்றும் நேர்மை ஆகிய உயரிய பண்புகளுடன், நிலையுறுதியானதும் தடையற்றதுமான சேவையை வழங்கி, கிராம மக்களின் நீடித்த நம்பிக்கையைப் பெற்றவராகத் திகழ்கிறார்.

## சிறப்பம்சம்:



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இந்தியாவின் முதல் அஞ்சல் துறைப் பயிற்சி நிலையம், உத்தரபிரதேச மாநிலம் சஹாரன்பூரில், சேவை, திறன் மேம்பாடு மற்றும் நிபுணத்துவத்தின் மையமாக 1951 ஆம் ஆண்டு முதல் விளங்கி வருகிறது. அஞ்சல் துறைப் பயிற்சியாளர்கள் கற்றுக்கொள்ளவும், வளர்ச்சியடையவும், வாழ்நாள் முழுவதும் நினைவில் நிலைத்திருக்கும் அனுபவங்களைப் பெற்றுச் செல்லவும் இந்தப் பயிற்சி மையம் ஒரு அழகிய கற்றல் தளமாக அமைந்துள்ளது.



வீடியோவைப் பார்க்க இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

தமிழ்நாட்டின் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமமான பூச்சிமேடு, 'சம்பூரண பீமா கிராமம்' என்ற உயர்ந்த நிலையை எட்டியுள்ளது. கிராம மக்களின் கூட்டு நம்பிக்கையும், செயலில் வெளிப்பட்ட பங்கேற்பும் காரணமாக, நூறு சதவீத ஊரக அஞ்சல் ஆயுள் காப்பீடு (RPLI) பாலிசிகள் என்ற இலக்கை அவர்கள் சாதித்துள்ளனர்.இந்த மைல்கல் சாதனை, அந்தப் பகுதியின் கிராமின் டாக் சேவக்குகளான திருமதி தாரிணி டி. மற்றும் திருமதி அபிராமி ஆர். ஆகியோரின் அர்ப்பணிப்புணர்வு மிக்க சேவையால் சாத்தியமானது. அவர்களது உந்துதலான வெளிச்சேவை முயற்சிகள், ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிதியியல் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவியுள்ளது.

# அஞ்சல் தலைகள் சேகரிப்பு மூலை: அஞ்சல் தலைகளும், கதைகளும்:






புதுடெல்லியில் பாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலக நலவாழ்வு மையம் (WHO) நடத்தும் உச்சி மாநாடு நடைபெற்றதையொட்டி, மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் இந்தியாவின் மருத்துவ மூலிகைத் தாவரங்களைப் பிரதிபலிக்கும் ஐந்து தொடக்க விழா அஞ்சல் தலைகளைக் கொண்ட ஒரு தொகுதி வெளியிடப்பட்டது.இந்த அஞ்சல் தலைகளின் வெளியீட்டு நிகழ்வு, உலக நலவாழ்வு மையத்தின் பொது இயக்குநர் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயசஸ் அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா அவர்கள் ஆகியோரின் மேதகு முன்னிலையில் நடைபெற்றது.ஷதாவரி, மண்டூகபர்ணி, பிப்பலி, குடூசி, அஷ்வகந்தா ஆகிய மருத்துவ மூலிகைகளைச் சித்தரிக்கும் இந்த அஞ்சல் தலைகளின் தொகுதி, இந்தியாவின் செழுமையும் பெருமையும் மிக்க பாரம்பரிய மருத்துவ மரபுகளை உலகிற்கு எடுத்துக் காட்டும் விதமாக அமைந்துள்ளது.







இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர் (சாம்ராட் சுவரண் மாறன்) அவர்களைப் பற்றிய சிறப்புமிகு நினைவு அஞ்சல் தலை, மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. இராதாகிருஷ்ணன் அவர்களால் வெளியிடப்பட்டது.இந்த அஞ்சல் தலை, இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையரின் வாழ்க்கை வரலாறு, பாரம்பரியப் பெருமை, போர்க்களத்தில் வெளிப்பட்ட அவரது அதீத வீரத்திற்குச் சமமாக ஆட்சியிலும் அவர் வெளிப்படுத்திய ஆழ்ந்த அரசியல் அறிவு மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றைச் சித்தரிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.மேலும், தமிழ்நாட்டின் ஆலயங்கள், கல்வெட்டுகள், சாசனங்கள் மற்றும் மரபுகள் நெடுகிலும் இன்றளவும் நீடித்து நிலைக்கும் அவரது தாக்கம் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த அஞ்சல் தலை வலியுறுத்துகிறது.







பாம்பே ஜிம்கானாவின் 150-ஆவது ஆண்டு நிறைவையொட்டி, அதன் பெருமைமிகு பாரம்பரியத்தை நினைவுகூரும் வகையில் வெளியிடப்பட்ட நினைவு அஞ்சல் தலையை, மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புகள் மற்றும் வடகிழக்குப் பகுதிகள் மேம்பாட்டு வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்யா எம். சிந்தியா அவர்கள் வெளியிட்டு, அமைப்பிற்கு புகழாரம் சூட்டினார்.இந்திய விளையாட்டுத் துறையின் வரலாற்றில் பாம்பே ஜிம்கானா வகிக்கும் முக்கியப் பங்கு, அதன் செழுமையான விளையாட்டுப் பாரம்பரியம் மற்றும் காலத்தைத் தாண்டி நிலைத்து நிற்கும் அதன் மரபுச் சிறப்பு ஆகியவற்றை அவர் குறிப்பிட்டு பாராட்டினார்.







புகழ்பெற்ற தெலுங்கு எழுத்தாளர், கவிஞர் மற்றும் பாடலாசிரியரான ஆருத்ரா அவர்களின் 100-ஆவது பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், **ஹைதராபாத்** ஒரு சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. பொதுமக்கள் கலாச்சாரத்தையும் அறிவுசார்ந்த இலக்கிய மேன்மையையும் ஒருங்கிணைத்த அவரது படைப்புகள், தெலுங்கு இலக்கியத்தில் அழியாத தடம் பதித்துள்ளதை இந்த அஞ்சல் தலை எடுத்துக்காட்டுகிறது






இந்தியப் பல்கலைக்கழகங்களின் சங்க அமைப்பின் நூற்றாண்டு விழாவையொட்டி, பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு பீகார் ஆளுநர் திரு. ஆரிஃப் முகம்மது கான் அவர்களால் ஒரு சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. இந்தியாவின் உயர்கல்வி அமைப்பை வலுப்படுத்துவதில் அந்த அமைப்பின் வரலாற்றுப் பங்களிப்பை இந்த அஞ்சல் தலைப் போற்றுகிறது.




இந்திய ரயில்வே நிறுவனங்களின் 100 ஆண்டுகள் நிறைவைக் குறிக்கும் வகையில், ரூ.10 மதிப்புள்ள நினைவு அஞ்சல் தலையொன்றை இந்திய அஞ்சல் துறை வெளியிட்டுள்ளது.






‘கட்ச் தண்ணீர்ப் போராளி’ எனப் புகழப்படும் திரு. டாம்ஜிபாய் லால்ஜிபாய் ஷா (அங்கோர்வாலா) அவர்களை கௌரவிக்கும் வகையில், ‘மை ஸ்டாம்ப்’ சிறப்பு அஞ்சல் தலை அஹமதாபாத் முதன்மை அஞ்சல் துறை தலைவர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. கட்ச் பகுதியில் நீர்ப்பாதுகாப்பு மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்பு சேவைகளை இது நினைவுகூருகிறது.








நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் திருவிழாக்களைச் சிறப்பிக்கும் வகையில், படங்களடங்கிய அஞ்சல் அட்டைகள் தொகுதியும், 2026 ஆம் ஆண்டிற்கான அஞ்சல் தலை சேகரிப்பு நாட்காட்டியும் அஞ்சல் துறைச் செயலாளர் திருமதி வந்திதா கவுல் அவர்களால் வெளியிடப்பட்டது.




தேசிய நுகர்வோர் உரிமைகள் தினத்தையொட்டி, 24.12.2025 அன்று பெங்களூரு ஜி.பி.ஓ.வில் ஒரு சிறப்பு பட அஞ்சலட்டை வெளியிடப்பட்டது. நுகர்வோர் விழிப்புணர்வு, உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த செய்தியை இது வலியுறுத்துகிறது.



ஆந்திரப் பிரதேச அஞ்சல் வட்டத்தின் குண்டூர் கோட்டத்தில் உள்ள வெங்கடபள்ளம் கிளை அஞ்சல் நிலையத்தில், பாரத் ரத்னா திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களை நினைவுகூரும் சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.







உலக யோகா தினத்தை முன்னிட்டு, மகாராஷ்டிர அஞ்சல் வட்டத்தின் முதன்மை அஞ்சல் துறை தலைவர் திரு. அமிதாப் சிங் அவர்களால், சிறப்பு கேன்சலேஷனுடன் கூடிய அஞ்சல் உறை வெளியிடப்பட்டது. யோகாவின் உலகளாவிய முக்கியத்துவத்தையும் அதன் பயன்களையும் இவை எடுத்துரைக்கின்றன.




உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி, ஒடிசா அஞ்சல் வட்டத்தின் பாலங்கீர் அஞ்சல் கோட்டத்தில், எச்.ஐ.வி / எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு கேன்சலேஷன் 'Cachet' ஐ வெளியிட்டது. நோய் தடுப்பு, கருணை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

## முக்கிய அம்சங்கள்



மும்பை ஜி.பி.ஓ., சாகலா, சயன், டபார், காள்பதேவி ஆகிய ஐந்து IDCகளுக்கு 211 மின்சார இருசக்கர வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதன் மூலம், நிலைத்த மற்றும் செயற்திறன் மிக்க அஞ்சல் பட்டுவாடா நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளன.TVS e-Mobility Solutions நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்ட இந்த முன்னெடுப்பின் மூலம், மேற்கண்ட மையங்கள் முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட பட்டுவாடா மையங்களாக வடிவ மாற்றமடைந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, சாதாரணக் கடிதங்கள், பதிவு அஞ்சல்கள், பார்சல் ஆகியவை மின்சார வாகனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. அஞ்சல் அலுவலகங்களுக்குள் நிறுவப்பட்டுள்ளஅர்ப்பணிக்கப்பட்ட சார்ஜிங் உள்கட்டமைப்பு, இந்த பசுமை மாற்றத்திற்கு வலுவான ஆதரவாக அமைகிறது. இது பசுமைப் போக்குவரத்தையும் செயல்திறனையும் மேம்படுத்தும் இந்திய அஞ்சல் துறையின் கடப்பாட்டுறுதியை வெளிப்படுத்துகிறது.





டியோகர் நகரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான அஞ்சல் தலைகள் சேகரிப்பு கண்காட்சி – DEOPEX-2025, 30 பள்ளிகளைச் சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட மாணவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் நடைபெற்றது.அஞ்சல் தலை வடிவமைப்பு, தபால் பெட்டிகளுக்கு வண்ணம் பூசுதல், வினாடி-வினா , கடிதம் எழுதும் போட்டிகள் போன்ற செயல்பாடுகள் மூலம், டியோகரின் ஆலயங்கள் மற்றும் தட்சசீல வித்யாபீடம் உள்ளிட்ட பாரம்பரிய இடங்களைப் பற்றிய சிறப்பு அஞ்சல் உறைகளின் மூலம் அவற்றின் செழுமையான பாரம்பர்யப்புகழ் வாய்ந்த பெருமைகளை அறிந்து கொண்டனர்.

வகுப்பறைகளுக்கு அப்பாற்பட்ட கற்றலை ஊக்குவிக்கும் விதத்தில், DEOPEX-2025 நிகழ்ச்சி, அஞ்சல் தலைகள் சேகரிப்பை ஈடுபாட்டுடனும் படைப்பாற்றலுடனும் கூடிய கற்றல் அனுபவமாக மாற்றியது.





ஒடிசா அஞ்சல் வட்டம், மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளில் கையால் எழுதப்பட்ட தகவல்தொடர்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வளர்ப்பதற்காக, தாய் அகார் கடிதம் எழுதும் போட்டியை ஏற்பாடு செய்தது.. மாணவர்கள், இளைஞர்களின் நடுவே,கடிதம் எழுதுவதன் செழுமை மிக்க பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லுவதை இந்திய அஞ்சல் துறை தொடர்ந்து செய்து வருகிறது



கோவா அஞ்சல் கோட்டம் , கோவா பல்கலைக்கழகம் மற்றும் கோவா அஞ்சல் தலைகள் சேகரிப்பு & நாணயவியல் சங்கத்துடன் இணைந்து," The Mycological Kingdom : A Philatelic Journey through Fungal Classification" என்ற கருத்தரங்கை நடத்தியது.இந்த நிகழ்வு, புகழ்பெற்ற பூஞ்சைக்காளானியல் அறிஞர் டாக்டர் வி.டி. வர்தக் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது




பெங்களூரு அயல்நாட்டு அஞ்சல் நிலையத்தில் நடைபெற்ற வாடிக்கையாளர் சந்திப்பு மற்றும் சர்வதேச அஞ்சல் சார் வணிகம் குறித்த ஒரு பணிமனை, ஏற்றுமதியாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் MSME நிறுவனங்களை ஒருங்கிணைத்து, உள்ளூர் தயாரிப்புகளை உலக சந்தைகளுடன் இணைக்கும் தளமாக அமைந்தது.

• கர்நாடக அஞ்சல் வட்டத்தின் முதன்மை தலைமை அஞ்சல் துறை தலைவர் மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்ற இந்த நிகழ்வில்,Dak Niryat Kendra Portal மூலம் காகிதமற்ற சுங்க அனுமதி, இந்திய அஞ்சல் துறையின் உலகளாவிய வலைப்பின்னல் திறன், மற்றும் வாடிக்கையாளர் பின்னூட்டங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

सत्यमेव जयते
भारत सरकार

भारतीय डाक
डाक सेवा-जन सेवा
India Post
Dak Sewa-Jan Sewa

Follow us on www.indiapost.gov.in